**அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியம் - 2020**

---

அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியத்தின் 2020 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 2009 இன் 44 ஆம் இலக்க அம்புலுவாவ திசாநாயக்க முதியன்சேலாகே ஜயரத்ன சமய நிலையம் மற்றும் உயிரின பல்வகை தொகுதி பொறுப்பு நிதியச் சட்டத்தின் 10(4) பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக் கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில் காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877 (2) (ஈ) உறுப்புரை மற்றும் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2020 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 2.1 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் பெயரில் கம்பளை இலங்கை வங்கி கிளையில் பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 4,000,000 பெறுமதியான 03 நிலையான வைப்புகளுக்குரிய நிலையான வைப்பு சான்றிதழ்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கவில்லை. | வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டதென பொருளாளரினால் அறிக்கையிடப்பட்டிருப்பினும் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான வைப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருமான பதிவேட்டின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டில் நுழைவுச் சீட்டுகள் விற்பனையினால் பெறப்பட்ட வருமானம் ரூபா 9,525,575 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வழங்கப்பட்ட நுழைவு அனுமதிகளின் அடிகட்டு பிரதிகள் தீ வைத்து அழிக்கப்பட்டிருந்தமையினால் அவ் வருமானம் திருப்திகரமாக கண்காணிக்க இயலவில்லை. | நாளாந்த நுழைவுச் சீட்டு விற்பனை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள பதிவேட்டில் பெறல் மற்றும் வழங்கல் தொடர்பான தகவல்கள் குறிக்கப்பட்டுள்ள தென. | வருமானம் கண்காணிப்பதற்கு நுழைவுச் சீட்டுக்களின் அடிகட்டு பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென. |
| (இ) | வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களில் சேவையாற்றும் அதிகார சபையிடமிருந்து சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பெறும் பதவியணிக்கு, அதற்கு பங்கேற்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு நபர்களுக்கு 2020 ஆம் ஆண்டில் 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 558,463 செலவிடப்பட்டு உணவு பானங்கள் வழங்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதி பிரமாணம் 156 (7) பிரகாரம் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் உரிய சிக்கனத்துடன் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் வருடாந்த பாதீட்டில் அங்கீகாரம் பெறப்படாதிருக்கை - யில் மற்றும் அச் செலவினங்கள் உறுதி செய்யும் பட்டியலும் சமர்ப்பிக்கப்பட்டிராத போது சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் பெறும் உத்தியோகத்தர்களுக் கு இவ்வாறு உணவு மற்றும் பாணம் வழங்கியமையினால் நிதியத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டுள்ளதென. |
| (ஈ) | முறையான டென்டர் நடைமுறையொன்று பின்பற்றப்படாது நிதியத்திற் சொந்தமான 02 வாகனங்கள் அரச மதிப்பீட்டாளரொருவரின் தனிப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 7.5 மில்லியனிற்கு கடந்த ஆண்டுகளில் வெளி நபர்களுக்கு விற்கப்பட்டுள்ளதென நம்பிக்கை நிதியத்தின் பொருளாளரினால் கூறப்பட்டிருந்த போதிலும், அதற்கு தொடர்புடைய மதிப்பீட்டு ஆவணம், வாகனம் விற்றலினால் பெறப்பட்ட பணத்தொகை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பின்னர் விரிவான அறிக்கை சமர்பிக்கப்படும் எனவும் நிலையான சொத்துக்கள் பதிவேடு (2020) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | அரச பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிதுடன் கொடுக்கல் வாங்கல்கலுக்கு தொடர்புடைய அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என. |

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழிய சேமலாப நிதியச் சட்டம் மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் | மீளாய்வாண்டினுள் ரூபா 149,816 ஆன ஊழியர் பங்களிப்பு மற்றும் ரூபா 224,724 ஆன தொழில் தருனர் பங்களிப்பாக கூட்டுத்தொகை ரூபா 374,540 உம் ரூபா 56,181 ஆன ஊழிய நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பும் குறித்த நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | குறித்த சட்டங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| (I) | நிதி பிரமாணம் 137 | நிதி பிரமாணம் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகரிக்கப்படாத 52 உறுதிச் சீட்டுக்களுக்காக ரூபா 5,493,696 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | பிரமாணம் பிரகாரம் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட வேண்டும் என. |
| (II) | நிதி பிரமாணம் 138 மற்றும் 257 | - அத்தாட்சிப்படுத்திய உறுதிச் சீட்டுகளுக்கு மட்டும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அத்தாட்சிப்படுத்தப்படாத 139 உறுதிச் சீட்டுக்களுக்காக ரூபா 15,946,943 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |
| | | - உறுதிச் சீட்டின் முற்பக்கத்தில், உத்திதேசிக்கப்பட்ட கொடுப்பனவினை பெறுவதற்குரியவர் யார் என்பதனை குறிப்பிடாது மற்றும் உறுதிச் சீட்டில் அனைத்து தகவல்களும் | பதில் வழங்கப்படவில்லை | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பூரணப்படுத்தாது இருக்கையில் 16 உறுதிச் சீட்டுக்கள் ஊடாக கூட்டுத்தொகை ரூபா 2,427,180 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (III) | நிதி பிரமாணம் 237 (ஆ) | கூட்டுத்தொகை ரூபா 1,448,546 ஆன கட்டுமான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக இருப்புச் சான்றிதழ் உறுதிச் சீட்டிற்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |
| (iv) | நிதி பிரமாணம் 264 | மீளாய்வாண்டின் 70 உறுதிச் சீட்டுக்கள் ஊடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 8,589,583 இற்காக பெறுநருக்கு பணம் பெறப்பட்டமைக்கு ரசீதுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |
| (v) | நிதி பிரமாணம் 272 (3) | மீளாய்வாண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 553,751 பெறுமதியான 03 கொடுப்பனவுகளுக்குரிய உறுதிச் சீட்டுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |
| (இ) | 2006 அரச பெறுகை வழிக்காட்டி கோவை | (i) முறையான டெண்டர் நடைமுறை பின்பற்றப்படாது தனியார் நிறுவனமொன்றின் மதிப்பீட்டின் அடிப்படையில் நிதியத்திற்கு சொந்தமான ரூபா 8.9 மில்லியன் செலவிடப்பட்டு மோட்டார் வாகனமொன்று முதலீட்டு கம்பனியொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பின்னர் விரிவான அறிக்கை சமர்பிக்கப்படும் என. | அரச பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | | (ii) வேலை மற்றும் சேவை வழங்கப்படுவதற்காக பெறுகை நடைமுறையிலிருந்து விலகி ரூபா 675,750 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | அரச பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | | (iii) பெறுகை நடைமுறை பின்பற்றப்படாது கூட்டுத்தொகை ரூபா | பதில் வழங்கப்படவில்லை | அரச பெறுகை வழிக்காட்டி கோவை |

| | | | |
|---|---|---|---|
| | 351,500 செலவிடப்பட்டு நுழைவுச் சீட்டு இயந்திரம், அதன் மென்பொருள், அலுவலக திரை மற்றும் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்கள் இன்வென்டரிக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.3. இணக்கமின்மைகள்**

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | பொறுப்புச் சபையினால் கணக்காய்விற்கு சமர்ப்பித்த காசு சேகரிக்கும் பதிவேட்டின் பிரகாரம், நுழைவுச் சீட்டு விற்றலினால் பெறப்பட்ட பணம் மற்றும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம் இடையே ரூபா 834,673 ஆன பற்றாக்குறை காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | பண பற்றாக்குறை தொடர்பில் நிதி பிரமாணம் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென. |
| **(ஆ)** | பொறுப்பு சபையின் உத்தியோகத்தர்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்த உறுதிச்சீட்டுக்கள் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தொகை மொத்தமாக ரூபா 15,946,943 ஆக காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டின் வங்கி கூற்று பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் கூட்டுத்தொகை ரூபா 15,445,864 ஆகியமையினால் ரூபா 501,079 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | வேறுப்பாட்டிற்கு காரணங்கள் பரீட்சித்து பார்த்து சீர் செய்யப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------

**3.1 நோக்கங்கள் அடையப்படாமை**

---------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பலுவாவ உயிரின பல்வகை பொறுப்பினூடாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் | நிதியத்திற்கு பெறப்படுகின்ற வருமானம் பயன்படுத்தப்பட்டு வளாகத்தினுள் வெவ்வேறு | நிதியத்தின் நோக்கங்கள் அடையப்படுவதற்கு |

| | | |
|---|---|---|
| வாங்கல்கள் மற்றும் செயற்பாட்டு பரிசோதனையின் போது 2009 இன் 44 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் உறுப்புரையிலான 20 நோக்கங்களில் நபர்களின் விளையாட்டு மற்றும் பொழுது போக்கு தொடர்பான திறன்கள் மேம்படுத்துவதற்காக போதுமான வசதிகள் வழங்கல் விவசாயிகளை ஊக்குவித்தல் மற்றும் சமூகத்தினுள் இளைஞர் விவசாய அமைப்புக்களை நிறுவுதல், அம்புலுவாவ மலைகளை சுற்றிய பிரதேசம் மேம்படுத்தல் மற்றும் அறிவுடன், வங்கிகளில் மற்றும் வேறு நிதி நிறுவனங்களில் முதலிடுவதற்கு நபர்களை ஊக்கமளித்தல் ஆகிய விடயங்கள் அடையப்படுவதற்கு மீளாய்வாண்டில் நிதியத்தினால் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக பயிற்சியுள்ள மற்றும் பயிற்சியற்ற தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு அவர்களுக்கு நியாயமான சம்பளமொன்று கொடுப்பனவு செய்வதினால் அவர்களின் நிலைப்பாட்டிற்காக உதவுதல், வாழ்க்கை மட்டத்தினை உயர்த்துவதற்காக உதவுதல், மேல் பணிகளுக்காக வெவ்வேறு பிரிவுகள் தொடர்பாக பயிற்சி பெற்ற தொழிலாளர்களை உருவாக்குவதன் ஊடாக அவர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தல், சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகளுள் நல் ஒத்துழைப்பினை உருவாக்குதல் போன்ற விடயங்கள் குறித்து வலுவான கவனம் செலுத்தப்பட்டுள்ளது என. | போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என. |

## 3.2 திட்டமிடல்

------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமையாளராக சேவையாற்றியவர்களின் நாளாந்த வருகை தொடர்பாக எந்தவொரு அறிக்கையும் பேணிச் செல்லப்படாது மீளாய்வாண்டில் கூட்டுத்தொகை ரூபா 725,000 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த பதவிகளுக்குரிய நியமனக் கடிதம் பெற்றுக் கொடுக்கப்பட்டிராமையினால் அதன் துல்லியம் உறுதி செய்யப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 156 மற்றும் 2009 ஏப்ரல் 16 திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை 09/2009 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதியத்திற்கு சொந்தமான கெபடேரியா ஹோட்டல் (செனோரா) மீளாய்வாண்டின் மே மாதம் தொடக்கம் திசெம்பர் மாதம் வரை வெளி நபர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அதற்கு தொடர்புடைய குத்தகை ஒப்பந்தமொன்று ஏற்படுத்திக் கொள்வதற்கு மற்றும் வருமானம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஹோட்டல் இது வரையில் நலன் புரி சேவையொன்றாக பேணிச் செல்லப்படுகின்றமையினால் அறவிடல் இல்லை. எனினும் 2021 ஆண்டின் ஆகஸ்ட் மாதம் தொடக்கம் மாதாந்த கட்டணம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிதி பிரமாணம் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |
| (இ) | மீளாய்வாண்டில் 05 சந்தர்ப்பங்களின் போது வாகனங்கள் பழுதுபார்த்தலுக்காக கூட்டுத்தொகை ரூபா 271,950 ஆன செலவொன்று ஏற்கப்பட்டிருப்பினும், மேற்படி பழுதுபார்த்தலுக்கு முன்னர் மற்றும் பின்னர் இயந்திர பொறியியலாளர் அல்லது மோட்டார் வாகன பரிசோதகரின் பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | இயந்திர பொறியியலாளர் அல்லது மோட்டார் வாகன பரிசோதகரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என. |

### 3.4 நிதி முகாமைத்துவம்

-----------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | நாளாந்த பண பெறுவனவுகள் தாமதமின்றி வங்கியில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், பெறப்பட்ட ரூபா 406,160 வங்கியில் வைப்புச் செய்யப்படாது செலவு செய்யப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | சேர்க்கப்படுகின்ற பணம் தாமதமின்றி வங்கியில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |
| **(ஆ)** | நிதி பிரமாணம் 387 பிரகாரம் காசோலை ஊடாக மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளுக்காகவும் தமது வங்கி மீதி போதுமானதா என கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தர் தேடியறிதல் வேண்டும். எனினும், நிதியத்தில் நீண்ட காலமாக வங்கி மேலதிக பற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், அது மீளாய்வாண்டு ஆரம்ப திகதிக்கு மற்றும் இறுதி திகதிக்கு முறையே 904,108 மற்றும் ரூபா 2,138,192 ஆக காணப்பட்டது. | இந்த ஆண்டினுள் அபிவிருத்தி செயற்திட்டம் பல மேற்கொண்டமையினாலும், வருமான நிலை பலவீனமானமையினாலும் வங்கி மேலதிக பற்று பெற்றுக் கொள்வதற்கு ஏற்பட்டது என. | நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |

## 3.5 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்கு சொந்தமாக ரூபா 80,000 பெறுமதியுடைய 04 போனிகள் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டதுடன், அது தொடர்பான பரிசோதனையின் போது அதில் இரண்டு இறந்து போனமை பொருளாளரினால் குறிப்பிடப்பட்டது. இறந்த விலங்குகள் தொடர்பாக பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிராமையினால் அவ் விலங்குகள் இறந்தமை உறுதி செய்யப்படவில்லை. | குறித்த விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் தவறவிடப்பட்டுள்ளது என. | நிதி பிரமாணம் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |
| (ஆ) | பொறுப்பு நிதியத்திற்கு சொந்தமாகவுள்ள சுற்றுலா விடுதிக்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 153,698, ரூபா 148,903 மற்றும் ரூபா 6,550 ஆக கூட்டுத்தொகை ரூபா 309,151 செலவிடப்பட்டிருப்பினும் சுற்றுலா விடுதி ஊடாக எந்தவொரு வருமானமும் ஈட்டப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சொத்துக்கள் பயனுறுதி மிக்கதாக பயன்படுத்தப்படல் வேண்டும் என. |

## 3.6 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உயர் நீதிமன்ற வழக்கு எண் 684/2001 வழுங்க்கு நடவடிக்கைக்காக 06 சந்தர்ப்பங்களின் போது விலைப்பட்டியல்கள் அல்லது பற்றுச் சீட்டுகள் இன்றி வழக்கறிஞர் கட்டணமாக ரூபா 515,000 இரு வழக்கறிஞர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த காணி வழக்கிலிருந்து விலகியுள்ளதுடன் வழக்கறிஞர்களினால் பற்றுச் சீட்டுக்கள் வழங்கல் மறுக்கப்பட்டுள்ளது என. | குறித்த அத்தாட்சி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை என. |
| (ஆ) | பணம் பெறுநர் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்கள் | பதில் வழங்கப்படவில்லை | -மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | இணங்காமை, ஒப்புதல் விலைப்பட்டியல் (on Approval Bil) சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை, பொறுப்பின் பதவியணியின் நபர்களின் பெயரில் உறுதிச் சீட்டுக்கள் மற்றும் காசோலைகள் எழுதப்பட்டிருந்தமை போன்றன காரணமாக ரூபா 1,497,053 ஆன 11 கொடுப்பனவு சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ளப்பட முடியவில்லை. | | |
| (இ) | கல்லிலான புத்தர் சிலை உருவாக்குவதற்காக உடைத்து அகற்றப்படுகின்ற கற்கள் அளவிடுவதற்காக முறைமையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் அக் கற்கள் விற்பனை அல்லது வேறு பயனுறுதிமிக்க நடவடிக்கையொன்றிக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சந்தை விலை ரூபா 9,833,130 ஆன இந்த உடைத்து அகற்றப்பட்ட 2185.14 கியூப் கருங்கள வேலைத் தளத்தில் காணப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையும் வெளிப்படுத்தப்படவில்லை. | கற்கள் உடைக்கும் போது வெடித்து வீசப்படும் கற்கள் அருகிலுள்ள சரிவில் விழுகின்றது. வீதியின் எஞ்சிய கற்கள் மட்டும் அறவிடப்பட்டு சரிவிற்கு தள்ளப்படல் மேற்கொள்ளப்பட்டது என. | -மேற்படி - |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | வளாகத்தினை உருவாக்கியவரின் சிலை செதுக்குவதற்காக ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யும் உரிய முறைமையொன்று அல்லது ஒப்பந்தமொன்றிக்கு உடன்படாது தனியார் நிறுவனமொன்றிக்கு 2020 ஆம் ஆண்டின் சனவரி மாதம் ரூபா 500,000 முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அப் பணி முறையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கற்கலிலான உருவத்தினை உருவாக்குவதற்காக லக்பிரிய ட்ரேடஸ் இற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக முற்பணமாக ரூபா 500,000 ஆன பணம் கொடுப்பனவு செய்யப்பட்டது. எனினும் தேவையான பிரகாரம் சரியாக அப் பணி நிறைவேற்றப்படாமையினால் அது நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்ட முற்பணம் நந்தன கன்ஸ்டிரக்ஷன் இற்கு கையளிக்கப்பட்டது. | அரச பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | கல்லிலான புத்தர் சிலை செதுக்குவதற்காக கற்கள் உடைத்து அகற்றல் தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டில் வேறு தனியார் நிறுவனமொன்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 500,000 ஆன முற்பணமும் உள்ளடங்கலாக மீளாய்வாண்டின் 04 சந்தர்ப்பங்களின் போது ரூபா 2.3 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் கருங்கள் உடைப்பதற்கு மற்றும் அது பெகோ இயந்திரத்தினால் அகற்றுவதற்கு 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,421,250 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது இந்த பணி இடை நிறுத்தப்பட்டிருந்தது. | நாடு முழுதும் காணப்பட்ட கொரொனா நிலை காரணத்தினால் தொடர்புடைய தொழில் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. | ஒப்பந்தம் வழங்குவதற்காக முறையான முறைமையொன்று பின்பற்றப்படல் வேண்டும். சாத்தியவள ஆய்வொன்றில் பயனுறுதி மிக்கதாக அடையாளப்ப -டுத்திக் கொண்ட செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும் என. |

## 3.8 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்வு திகதியாகையில் ரூபா 33,400,000 ஆன புத்தகங்கள் பெறுமதியுடைய நூலகம், ''கெபெடேரியா-02'', மாநாட்டு மண்டபம், சுற்றுலா விடுதி இல 01 மற்றும் 02 என 05 கட்டிடங்கள், பெறுமதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத திரையரங்கம் மற்றும் முகாமைத்துவ இல்லாம் மீளாய்வாண்டிலும் எந்தவொரு பணிக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை | சொத்துக்கள் விளைவுள்ளதாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |
| (ஆ) | அரச பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் டென்டர் நடைமுறையிலிருந்து விலகி ரூபா 230,000 ஆன பணம் செலவிடப்பட்டு சுற்றுலா பயணிகளுக்கு பயன்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மின்னணு மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கு பொருத்தமற்றதென்பதனால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அக் கொள்வனவிற்கு தொடர்புடையதாக பரிந்துரை, அங்கீகாரம் மற்றும் செலவினை அத்தாட்சிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிராததுடன் அதற்குரிய விலைப்பட்டியல்கள் மற்றும் பற்றுச் | பதில் வழங்கப்படவில்லை | அரச பெறுகை வழிக்காட்டி கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மற்றும் நோக்கம் கொண்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என. |

சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் பௌதீக பரீட்சிப்புக்காக முன்வைக்கப்படவில்லை.

**3.9 நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொறுப்பு சபையினால் அம்புலுவாவ சூழலில் உயிர் பல்வகை அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் கூட்டுத்தொகை ரூபா 1,132,500 ஆன செலவவொன்று ஏற்கப்பட்டு மண் வெட்டுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால் அம்புலுவாவ சூழலில் உயிர் பல்வகைமைக்கு மற்றும் சுற்றாடல் நிலைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என அவதானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைக்காக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது உயிர் பல்வகைத் தன்மைக்கு தாக்கமளிக்கும் வகையில் செய்றபடல் தொடர்பில் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் என. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப் பிரமாணம் 877(1) பிரகாரம் பொறுப்பு நிதியத்திற்காக வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அது பொறுப்பு சபைக்கு சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொண்டு அதற்கு அமைவாக பாதீட்டினை கட்டுப்படுத்தி நிதியத்தின் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த குறைப்பாடு தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனா. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது செலவினம் ஏற்றல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என. |